1991 செப்டம்பர் 17]

அடித்துச் செல்லவேண்டுமென்று கேட்டு, அதற்கான முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று கேட்டு, இந்த ஐஸ் பிளான்ட்—கேரள மீன் விற்பனையாளர்கள் மீன்களை எல்லாம் எடுத்துச் சென்றுவிடுவதால் தான்—அது பங்ஷன் ஆகாமல் இருக்கிறது; அதனாலேயும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டு இனிமேலாவது இதைப் பரிசீலனை செய்து இப்படி ஒரு தொழிற்சாலை உண்டுபண்ணுவதன் மூலமாக வறட்சிக்கு இலக்காகி இருக்கின்ற, இன்டஸ்ட்ரியலி மோஸ்ட் பேக்வேர்டு என்று அறிவிக்கப்பட்டு இருக்கின்ற தொகுதிக்கு ஒரு ஒளி மயமான எதிர்க்காலம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதை குறிக்கும்].

2. தகவல் கோரல்.

தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் எடையூர் கிராமத்தில் இடி, மின்னலால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அரசின் கவனத்திற்கு மிக இன்றியமையாத ஒரு அவசரப் பிரச்சினையைக் கொண்டுவர வேண்டுமென்று திரு. பழனிசாமி என்னிடம் அனுமதி கோரி இருக்கிறார். நான் அனுமதி வழங்கி இருக்கிறேன். திரு. பழனிச்சாமி.

முற்பகல் 10-00

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 ஆம் தேதி தஞ்சை மாவட்டத்தில், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் எடையூர் என்ற உள்கிராமத்தில் கடுமையான மழை பெய்து இடி இடித்ததன் காரணமாக விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயத் தொழிலாளர்கள் மூன்று பேர்கள் அந்த இடர்பாட்டில் பாதிக்கப்பட்டு ஒருவர் ஸ்தலத்திலேயே இறந்து போய் விட்டார். இரண்டு பேர்களுடைய உயிர் ஊசலாடுகிற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இன்றுவரையில் அவர்கள் பிழைப்பார்களா என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. தனது கணவனுக்கு உணவு எடுத்துச்சென்ற கலைச்செல்வி என்ற பெண்ணும் இந்த இடர்பாட்டில் பாதிப்புக்

குள்ளாகி இருக்கிறார். விவசாயப் பணிகளில் ஈடுபட்டிருக்கிற ஏழை குடும்பத்தில் பிறந்திருக்கக்கூடிய அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இராமையன் என்னும் நபர் அந்த ஸ்தலத்திலேயே இறந்திருக்கிறார். அதைப்போல கணேசன், பக்கிரி, கலைச்செல்வி என்ற மூன்று பேர்களும் மிகவும் மோசமான நிலையில் இன்றுவரையில் உணர்வு திரும்பாத நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து, எந்தவிதமான வசதி வாய்ப்பும் இல்லாத அந்த ஏழை குடும்பத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் நிவாரண நிதி வழங்க வேண்டுமென்று உங்கள மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14—9—1991 அன்று மாலை மூன்று மணிக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி அங்கே எடையூர் கிராமத்தில் இடியாலும் மின்னலாலும் தாக்கப்பட்டு ஒருவர் இறந்தார் என்ற செய்தி தெரிய வந்தது. அந்தச் செய்தி எனக்கு தெரிவதற்கு முன்னாலே கூட, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு தெரிந்து இருக்கிறது. அவர்கள் உடனே என்னுடன் தொடர்பு கொண்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட இடர்பாடுகளை அன்றாடம் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு ஆகும். அதற்கு வேண்டியவற்றை செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் தெரிவித்து இருக்கிறார்கள். இராமையன் என்பவர் 35 வயதுள்ளவர் என்று சொன்னார்கள. அவர் இறந்து போய் இருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் தனக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இங்கேயிருக்கிற அரசு விதிப்படி 2,000 ரூபாய் அவர்கள் வழங்குவார்கள். வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு மேல் அவர்கள் எல்லாம் ஏழை விவசாயிகள் என்பதும், ஆதிதிராவிட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், தொழிலாளர்கள் என்பதும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்து இன்றைக்கு காலையில் அதை கவனித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். சிறப்பு நிதி வழங்கவேண்டுமென்றால், முதலமைச்சர் அவர்கள் ஆய்வுசெய்து சிறப்பு நிதியை வழங்குவார்கள் என்பதையும், தொழிலாளர்களுக்கு வேண்டிய நன்மைகளை இந்த அரசு செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.